**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சேந்தமங்கலம்.**

**முன்னிலை: சீ. ராஜ குமாரன் B.E. L.L.B.,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், சேந்தமங்கலம்.**

**2026–ஆம் ஆண்டு மே மாதம் 26–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**2057 வது திருவள்ளுவர் ஆண்டு, பராபவ ஆண்டு, வைகாசி மாதம் 12ம் நாள்**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 59/2026**

**(CNR.No. TNNM-14-000106-2026)**

அரசுக்காக

காவல் ஆய்வாளர்,

சேந்தமங்கலம் காவல் நிலையம் – குற்ற முறையீட்டாளர்

(குற்ற எண். 264/2025)

எதிர்

கண்ணன், க/பெ. ராமசாமி கவுண்டர்,

1/33, மேற்குத்தெரு, பழையபாளையம்,

முத்துகாபட்டி, சேந்தமங்கலம் வட்டம்,

நாமக்கல். – எதிரி

**( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற R.O.C No. 814/2020/RG/F1. தேதி: 07.04.2021 உத்தரவு படி)**

| | | |
|---|---|---|
| 1. | சம்பவ நாள் | 30.11.2025 |
| 2. | புகார் நாள் (குற்ற அறிக்கை தாக்கலான நாள்) | 04.02.2026 |
| 3. | எதிரி கைது செய்யப்பட்டு | கைது செய்யப்பட்ட நாள் \| பிணையில் சென்ற |

<table>
<tr><td></td><td>பிணையில் சென்ற நாள்</td><td><table><tr><td></td><td>நாள்</td></tr><tr><td>18.12.2025</td><td>18.12.2025</td></tr></table></td></tr>
<tr><td>4.</td><td>குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டு</td><td>எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS –ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பபட்டன.</td></tr>
<tr><td>5.</td><td>BNSS பிரிவு 263(2) ன் கீழான கேள்வி</td><td>01.04.2026</td></tr>
<tr><td>6.</td><td>எதிரியின் பதில்</td><td>பொய் வழக்கு</td></tr>
<tr><td>7.</td><td>வழக்கின் விசாரணை தொடங்கிய நாள்</td><td>05.05.2026</td></tr>
<tr><td>8.</td><td>சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td><table>
<tr><th>அரசு தரப்பு சாட்சிகள்</th><th>சாட்சிகளின் பெயர்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>பாரதி</td><td>05.05.2026</td><td>05.05.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>பூபாலன்</td><td>05.05.2026</td><td>05.05.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>கோகுல்</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>திருச்செல்வன்</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>செந்தில்நாதன்</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>மாரியப்பன்</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>துரைசாமி</td><td>21.05.2026</td><td>21.05.2026</td></tr>
<tr><td>அ.சா.8</td><td>பாலாஜி</td><td>21.05.2026</td><td>21.05.2026</td></tr>
</table></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | | அ.சா.9 \| திருநாவுக்கரசு \| 22.05.2026 \| 22.05.2026 |
| 9. | வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள் | 22.05.2026 |
| 10. | BNSS பிரிவு 351(1)(ஆ) ன் கீழான கேள்வி | 25.05.2026 |
| 11. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | 26.05.2026 |
| 12. | தீர்ப்பு | முடிவாக, எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 281, 106(1) of BNS ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை BNSS பிரிவு 271(1) ன் கீழ் விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 13. | குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தீர்ப்பின் நகல் வழங்கப்பட்ட நாள் | – |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | இல்லை. |

******

இந்த வழக்கானது 04.02.2026–ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசுதரப்பில் திருமதி. உதயாபானு., அரசு உதவி

வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. கமலகண்ணன், அவர்கள் முன்னிலையாகியும், 25.05.2026–ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது , இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கின் சாட்சி மற்றும் வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்...

## தீர்ப்புரை

**1)** அரசு தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 30.11.2025ந் தேதி காலை 10.00 மணியளவில் புகார்தாரர் மு.பாரதி என்பவரின் கணவர் கண்ணன் என்பவர் அவரது மகன் கோகுல் மற்றும் மாமியார் மாராயி ஆகியோரை காரில் ஏற்றிக்கொண்டு அவரது வீட்டிலிருந்து தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்று சேந்தமங்கலம் வழி அலங்காநத்தம் மெயின் ரோடு சந்திப்பில் உள்ள ஆலமரத்திற்கு அருகீல் இடதுபுறமாக மேற்கு நோக்கி திரும்பும்போது நலை தடுமாறி பொதுப்பாதையில் மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் கவனகுறைவாகவும், அஜாக்கிரதையாகவும் திருப்பியதில் கார் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் விழுந்து விபத்து ஏற்படுத்தியதாகவும், மேற்படி அதே தேதி அதே நேரம் அதே இடத்தில் மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக புகார்தாரரின் அம்மா மாராயி என்பவருக்கு சாலை விபத்தில் மரணத்தை விளைவித்ததாகவும், நிகழ் நிலை புகார் தராரான பாரதி கொடுத்த புகாரின் பேரில் சேந்தமங்கலம் காவல் நிலைய குற்ற எண் 264/2025 ல் எதிரி மீது பிரிவுகள் 281, 106(1) of BNS –ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விசாரணை முடிக்கப்பட்டு எதிரி மீது பிரிவுகள் 281, 106(1) of BNS ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

2) இவ்வழக்கின் இறுதி அறிக்கை மற்றும் பிற ஆவணங்களின் பரிசீலனை செய்ததில் எதிரி மீது முதல் நிலை வழக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இந்த வழக்கினை ஆண்டு பட்டிகை வழக்கு எண் 59/2026 ன் கீழ் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையின் பேரில் எதிரி இந்நீதிமன்–றத்தில் முன்னிலையானவுடன், அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும், BNSS 230–வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

3) வழக்கு ஆவணங்களின் நகல்களை எதிரி படித்துப் பார்க்கப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும், BNSS 193–ன் கீழ் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலித்து, எதிரி மீது சொல்லப்பட்டுள்ள குற்றம் குறித்து எடுத்துரைக்கப் போதுமான ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால், எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) of BNS ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரியிடம் வினவிய போது, எதிரி குற்றச் சாட்டுகளை மறுத்து, குற்றவாளி இல்லை என்றார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

4) எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்க, அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.9** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.7** வரையிலான சான்றாவ–ணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**5). அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–**

**5.1. அ.சா.1 பாரதி தனது சாட்சியத்தில்,** ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அவர் தனது கணவர் ஆவார் என்றும், கடந்த 30.11.2025ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு தானும் தனது மகனும் இவ்விபத்தில் இறந்துபோன தனது தாயார் மாராயி என்பவரும் மற்றும் ஆஜர் எதிரியான தனது கணவரும் தனது நெருங்கிய உறவினரின் திருமணத்திற்காக புதுச்சத்திரம் செல்லவேண்டி எதிரி காரை ஓட்ட தானும் தனது தாயாரும் பின்னால் அமர்ந்துகொண்டும், தனது மகன் முன் இருக்கையில் அமர்ந்து கொண்டும் சென்று கொண்டிருந்தபோது தாங்கள் தூங்கிவிட்டோம் என்றும், திடீர் என்று சத்தம் கேட்டு விழித்து பார்த்த போது சேந்தமங்கலம் டு அலங்காநத்தம் மெயின்ரோட்டிற்கு அருகில் உள்ள ஆலமரத்திற்கு அருகில் உள்ள பள்ளத்தில் தங்களது கார் கவிழ்ந்து இருந்ததாகவும், அருகில் இருந்தவர்கள் தங்களை மீட்டார்கள் என்றும், தனக்கு இடது கண்ணில் அடிபட்டிருந்ததாகவும், தனது மகனுக்கும் தனது கணவருக்கும் எவ்வித அடியும் படவில்லை என்றும், தனது அம்மா நெஞ்சுவலியால் துடித்து கொண்டிருந்ததாகவும், உடனே தாங்கள் அனைவரும் 108 ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல் டு திருச்சி சாலையில் உள்ள ஸ்ரீதர்ஷன் மருத்துவமனைக்கு தனது அம்மாவை அழைத்து சென்றதாகவும், தனது அம்மா அங்கு மயக்கமடைந்துவிட்டதால் மேல் சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு மருத்துவர்கள் தனது தாயாரை பரிசோதித்துவிட்டு அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறியதாகவும், இதன் பேரில் தான் சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் புகார் அளித்ததாகவும், புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை தங்களிடம் ஒப்படைத்ததாகவும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை

விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.2. அ.சா.2 பூபாலன் தனது சாட்சியத்தில்,** கடந்த 30.11.2025ம் தேதி காலை சுமார் 11.00 – 12.00 மணியளவில் தான் வீட்டில் இருந்த போது வாதி பாரதியின் அவரது மகனும் இவ்விபத்தில் இறந்துபோன அவரது தாயார் மாராயி என்பவரும் மற்றும் ஆஜர் எதிரியான தனது அத்தை மகனும் அவரது நெருங்கிய உறவினரின் திருமணத்திற்காக புதுச்சத்திரம் செல்லவேண்டி எதிரி காரை ஓட்ட பாரதியும் அவரது தாயாரும் பின்னால் அமர்ந்துகொண்டும், பாரதியின் மகன் முன் இருக்கையில் அமர்ந்து கொண்டும் சென்று கொண்டிருந்தபோது மேற்படி காரானது சேந்தமங்கலம் டு அலங்காநத்தம் மெயின்ரோட்டிற்கு அருகில் உள்ள ஆலமரத்திற்கு அருகில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்ததாகவும், தான் தகவல் கேள்விபட்டு நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்றதாகவும், தான் சென்றபோது மாராயி இறந்திருந்ததாகவும், பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை தங்களிடம் ஒப்படைத்ததாகவும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**5.3. அ.சா.3 கோகுல் தனது சாட்சியத்தில்,** கடந்த 30.11.2025ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு தானும் தனது அம்மாவும் இவ்விபத்தில் இறந்துபோன தனது பாட்டி மாராயி என்பவரும் மற்றும் ஆஜர் எதிரியான தனது அப்பாவும் தனது நெருங்கிய உறவினரின் திருமணத்திற்காக புதுச்சத்திரம் செல்லவேண்டி எதிரி காரை ஓட்ட தனது அம்மாவும் தனது பாட்டியும் பின்னால் அமர்ந்து கொண்டும், தான் முன் இருக்கையில் அமர்ந்து கொண்டும் சென்று கொண்டிருந்தபோது தாங்கள் தூங்கி

விட்டதாகவும், திடீர் என்று சத்தம் கேட்டு விழித்து பார்த்தபோது சேந்தமங்கலம் டு அலங்காநத்தம் மெயின்ரோட்டிற்கு அருகில் உள்ள ஆலமரத்திற்கு அருகில் உள்ள பள்ளத்தில் தங்களது கார் கவிழ்ந்து இருந்ததாகவும், அருகில் இருந்தவர்கள் தங்களை மீட்டதாகவும், தனது அம்மாவிற்கு இடது கண்ணில் அடிபட்டிருந்ததாகவும், தனக்கும் தனது அப்பாவிற்கும் எவ்வித அடியும் படவில்லை என்றும், தனது பாட்டி நெஞ்சுவலியால் துடித்து கொண்டிருந்ததாகவும், உடனே தாங்கள் அனைவரும் 108 ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல் டு திருச்சி சாலையில் உள்ள ஸ்ரீதர்ஷன் மருத்துவமனைக்கு தனது பாட்டியை அழைத்து சென்றதாகவும், தனது பாட்டி அங்கு மயக்கமடைந்துவிட்டதால் மேல் சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு மருத்துவர்கள் தனது பாட்டியை பரிசோதித்துவிட்டு அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறியதாகவும், பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை தங்களிடம் ஒப்படைத்ததாகவும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

5.4. **அ.சா.4 திருச்செல்வன் தனது சாட்சியத்தில்,** கடந்த 30.11.2025ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு தான் வீட்டில் இருந்தபோது தனது அத்தை மாராயி என்பவர் அவரது மகள், பேரன், மருகன் உடன் காரில் திருமணத்திற்காக சென்று கொண்டிருந்த போது சேந்தமங்கலம் டு அலங்காநத்தம் மெயின்ரோட்டில் சந்திப்பில் உள்ள ஆலமரத்திற்கு அருகில் இடதுபுறமாக மேற்கு நோக்கி திரும்பிய போது எதிரி கவனக்குறைவாக வண்டியை ஓட்டியதாகல் கார் கட்டுப்பாட்டை இழந்து எதிரில் இருந்து பள்ளத்தில் கவிழ்ந்து

விபத்து ஏற்பட்டதாகவும், விபத்தில் தனது அத்தை மாராயிக்கு நெஞ்சு வலி ஏற்பட்டதாகவும், தனது அத்தை மாராயி நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றிருப்பதாகவும் தகவல் வந்தது தான் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது தனது அத்தை மாராயி இறந்திருந்ததாகவும், போலிசார் பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை தங்களிடம் ஒப்படைத்ததாகவும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**5.5. அ.சா.5 செந்தில்நாதன் தனது சாட்சியத்தில்,** கடந்த 30.11.2025ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு தான் வீட்டில் இருந்தபோது தனது பெரியம்மா மாராயி என்பவர் அவரது மகள், பேரன், மருகன் உடன் காரில் திருமணத்திற்காக சென்று கொண்டிருந்தபோது சேந்தமங்கலம் டு அலங்காநத்தம் மெயின்ரோட்டில் சந்திப்பில் உள்ள ஆலமரத்திற்கு அருகில் இடதுபுறமாக மேற்கு நோக்கி திரும்பிய போது எதிரி கவனக்குறைவாக வண்டியை ஓட்டியதாகல் கார் கட்டுப்பாட்டை இழந்து எதிரில் இருந்து பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதாக தகவல் வந்ததாகவும், தான் உடனே விபத்து நடந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது தனது அக்கா வீட்டுக்காரர் கண்ணன் மற்றும் அவரது மகன் கோகுல் ஆகியோரை காரில் இருந்து வெளியே எடுத்துவிட்டதாகவும், தனது அக்காவையும் பெரியம்மாவையும் தாங்கள் தான் காரில் இருந்து வெளியில் வரவைத்ததாகவும், தனது அக்கா பாரதிக்கு இடது கண்ணில் அடிபட்டு வீக்கம் இருந்ததாகவும், தனது பெரியம்மா மாராயிக்கு நெஞ்சு வலி இருப்பதாக கூறியதாகவும், மற்ற இருவருக்கும் அடிபடவில்லை என்றும், தான் தனது பெரியம்மாவை 108 ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல்

தர்ஷன் மருத்துவனைக்கு அழைத்து சென்ற ஸ்கேன் செய்து பார்த்து விட்டு பின்பு நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும், அங்கு தனது பெரியம்மா மாராயியை பரிசோதித் மருத்துவர்கள் தனது பெரியம்மா இறந்துவிட்டதாக கூறியதாகவும், போலிசார் பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை தங்களிடம் ஒப்படைத்ததாகவும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சிமளித்துள்ளார்.

**5.6. அ.சா.6 மாரியப்பன் தனது சாட்சியத்தில்,** தேதி நினைவில் இல்லை என்றும், சுமார் 5 – 6 மாதங்களுக்கு முன்னர் தான் பளையபாளையத்தில் உள்ள டீ கடையில் டீ குடித்து கொண்டிருந்தபோது வடக்கே திடீர் என சத்தம் கேட்டதாகவும், தான் என்னவென்று பார்த்த போது அங்கு இருந்த ஆலமரத்திற்கு அருகே கார் ஒன்று கவிழ்ந்த நிலையில் இருந்ததாகவும், காரில் இருந்த நபர்களை அருகில் இருந்தவர்கள் வெளியில் மீட்டதாகவும், பின்பு காரில் இருந்த மாராயி என்பவருக்கு நெஞ்சுவலி இருப்பதாக கூறியதாகவும், பின்பு அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**5.7. அ.சா.7 துரைசாமி தனது சாட்சியத்தில்,** தேதி நினைவில் இல்லை என்றும், சுமார் 4 – 5 மாதங்களுக்கு முன்னர் ஒரு நாள் தான் பழையபாளயைம் பஞ்சாயத்து ஆபிஸ் அருகில் உள்ள ஆலமரத்திற்கு அருகில் வந்துகொண்டிருந்தபோது போலிசார் அங்கு நடந்த சாலை விபத்து வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்ததாகவும், போலிசார் அங்கு படம் வரைந்து எழுதிக்கொண்டு தன்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றதாகவும், பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம்

தன்னுடையது தான் என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.7 ன் மூலம் பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.8. அ.சா.8 பாலாஜி தனது சாட்சியத்தில்,** தேதி நினைவில் இல்லை என்றும், சுமார் 2 மாதங்களுக்கு முன்னர் சுமார் 10.30 – 11.00 மணியளவில் தான் தனது வீட்டில் இருந்ததாகவும், திடீர் என சத்தம் கேட்டது தான் என்னவென்று சாலையில் வந்து பார்த்தேன் அப்போது அங்கு இருந்த ஆலமரத்திற்கு அடியில் இருந்த பள்ளத்தில் கார் ஒன்று கவிழ்ந்து கிடந்ததாகவும், தான் என்னவென்று விசாரித்தபோது எதிரி தனது குடும்பத்துடன் வீட்டில் இருந்து கிளம்பி ஆலமரத்திற்கு அருகில் இடதுபுறமாக திரும்பும்போது காரை கவனக்குறைவாக ஓட்டியதால் கார் கட்டுப்பாட்டை மீறி அங்கு இருந்த பள்ளத்தில் கவிழ்ந்துவிட்டதாக சொன்னதாகவும், பின்பு தானும் அருகில் இருந்தவர்களும் காரில் இருந்தவர்களை மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், எதிரி கண்ணனின் மனைவிக்கு இடது கண் வீக்கமாக இருந்ததாகவும், கண்ணனின் மாமியார் நெஞ்சு வலியால் துடித்துக்கொண்டிருந்ததாகவும், எதிரிக்கும் அவரது மகனுக்கும் எந்த அடியும் படவில்லை என்றும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துளளார்.

**5.9. அ.சா.9 திருநாவுக்கரசு தனது சாட்சியத்தில்,** கடந்த 30.11.2025ம் தேதி 18.00 மணிக்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.பெரியசாமி சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் பொறுப்பு அலுவலில் இருந்தபோது வாதி பாரதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.264/2025, BNS 281, 106(1) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும்,

முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் திரு.கோவிந்தராசன் அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும், வழக்கை தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் 01.12.2025ம் தேதி காலை 06.00 மணிக்கு சம்பவ இடமான சேந்தமங்கலம் டு அலங்காநத்தம் மெயின்ரோடு சந்திப்பில் உள்ள ஆலமரத்திற்கு அருகே சென்று சாட்சிகள் துரைசாமி, மணிபாலன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்னர் நாமக்கல் அரசு மருத்துவமனை சென்று விபத்தில் இறந்து போன மாராயி பிரேதத்தின் மீது சவகிடங்கு முன்பு வைத்து சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 08.00 மணி முதல் 10.00 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டதாகவும், இறப்பின் காரணம் அறியும் பொருட்டு மாராயி பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்து ஆய்வறிக்கை வழங்கும்படி பணி மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேதத்தை முதல்நிலை காவலர் திரு.கோவிந்தராசு மூலம் பிரேதத்தை ஒப்படைத்ததாகவும், பின்னர் சாட்சிகள் பாரதி, கோகுல், பூபாலன், திருசெல்வன், செந்தில்நாதன், துரைசாமி, மணிமாலன், சின்னுசாமி, மாரியப்பன், பாலாஜி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 04.12.2025 தேதி விபத்தின் காரணம் அறியும் பொருட்டு விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 28 BL 5133 பதிவெண் கொண்ட வாகனத்தை மோ.வா.ஆய்வாளர்க்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்ததாகவும், 18.12.2025ந் தேதி காலை 11.00 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரி கண்ணனை காரணம் கூறி கைது செய்து தக்க

பிணையில் விடுவித்ததாகவும், 10.01.2026ம் தேதி மோ.வா.ஆய்வாளார் திரு.செந்தில் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோ.வா.ஆ.அறிக்கை பெற்றதாகவும், பின்னர் அன்றைய தினமே மாராயிக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் திரு.ராஜசேகர் மற்றும் பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் திரு.செங்கோட்டுவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றதாகவும், அன்றைய தினமே முதல்நிலை காவலர் திரு. கோவிந்தராசு மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.பெரியசாமி மற்றும் காவல் உதவி ஆய்வாளர் திரு.தமிழ்குமரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது BNS 281, 106(1) பிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.9 ன் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**6)** இவ்வழக்கில், அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு எதிராக தோன்றும் சாட்சிகளின் சாட்சியம் குறித்து, எதிரியிடம் BNSS 351(1) (ஆ)–ன் படி எடுத்துரைக்க, எதிரி பொய் சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை எனக் கூறியதன்பேரில், எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

**7)** இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

8) அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு உரிய தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது.

9) எதிரி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் இவ்வழக்கில் வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றும், வாதி தொடுத்த பொய்யான புகாரின் மீது சரியான புலன் விசாரணை செய்யாமல் போலீசார் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் அரசு தரப்பு வழக்கு சந்தேகத்துடன் அமைந்துள்ளது என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை வழக்கு குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

10) தீர்வு:

10.1. இந்த வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 281, 106(1) of BNS ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் நிரூபிக்க மேற்கண்ட குற்றச்சாட்டுகளின் மிக அத்தியாவசியமான பொருண்மையான எதிரி தனது வாகனத்தை அஜாக்கிரதையாகவும் அல்லது அதிவேகமாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பதை அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டியது அவசியமாகும்.

10.2. இவ்வழக்கில் நிகழ்நிழை புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் கடந்த 30.11.2025ம் எதிரி வண்டியை ஓட்ட தானும் தனது தாயாரும் பின்னால் அமர்ந்து கொண்டு சென்ற போது தான் தூங்கி விட்டதாகவும், திடீரென சத்தம் கேட்டு விழித்து பார்த்த போது தாங்கள்

சென்று கொண்டிருந்த வாகனம் சேந்தமங்கலம் டு அலங்காநத்தம் மெயின்ரோட்டிற்கு அருகில் உள்ள ஆலமரத்திற்கு அருகில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்து இருந்ததாக சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.1 பாரதியின் சாட்சியத்தை கவனமாக ஆராயும் போது அ.சா.1 பாரதி எதிரி தனது வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தியது குறித்து குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

**10.2.** இவ்வழக்கில் கண்ணுறு சாட்சியான அ.சா.3 கோகுல் தனது சாட்சியத்தில் கடந்த 30.11.2025ம் எதிரி வண்டியை ஓட்ட தான் தனது அம்மாவும், பாட்டி மாராயியும் பின்னால் அமர்ந்து கொண்டும் தான் முன் இருக்கையில் அமர்ந்து கொண்டு சென்ற போது தான் தூங்கி விட்டதாகவும், திடீரென சத்தம் கேட்டு விழித்து பார்த்த போது தாங்கள் சென்று கொண்டிருந்த வாகனம் சேந்தமங்கலம் டு அலங்காநத்தம் மெயின்ரோட்டிற்கு அருகில் உள்ள ஆலமரத்திற்கு அருகில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்து இருந்ததாக சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.3 கோகுலின் சாட்சியத்தை கவனமாக ஆராயும் போது அ.சா.3 கோகுல் எதிரி தனது வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தியது குறித்து குறிப்பிட்டு சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

**10.3.** இவ்வழக்கில் மற்றொரு கண்ணுறு சாட்சியான அ.சா.6 மாரியப்பன் தனது சாட்சியத்தில், தான் 5-6 மாதங்களுக்கு முன்பு பழையபாளையத்தில் உள்ள டீ கடையில் டீ குடித்து கொண்டிருந்த போது வடக்கே திடீரென சத்தம் கேட்டதாகவும் தான் என்னவென்று பார்த்த போது அங்கிருந்த ஆலமரத்திற்கு அருகே கார் ஒன்று கவிழ்ந்த நிலையில் இருந்ததாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.6 மாரியப்பனின் சாட்சியத்தை கவனமாக ஆராயும் போது அவர் டீ குடித்து கொண்டிருந்த

போது சத்தம் கேட்டு திரும்பி பார்த்துள்ள நிலையில் அவர் எதிரி அஜாக்கிரதையாகவும் அதிவேகமாகவும் வாகனத்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தியதை பார்த்திருக்க வாய்ப்பில்லை.

**10.4.** இவ்வழக்கில் மற்றொரு கண்ணுறு சாட்சியான அ.சா.8 பாலாஜி தனது சாட்சியத்தில் சுமார் 2 மாதங்களுக்கு முன்னர் சுமார் 10.30 – 11.00 ணியளவில் தான் தனது வீட்டிலிருந்த போது திடீரென சத்தம் கேட்டதாகவும், தான் என்னவென்று சாலையில் வந்து பார்த்த போது அங்கிருந்த ஆலமரத்திற்கு அடியில் பள்ளத்தில் கார் ஒன்று கவிழ்ந்து கிடந்ததாகவும் தான் என்னவென்று விசாரித்த போது எதிரி தனது குடும்பத்துடன் வீட்டிலிருந்து கிழம்பி ஆலமரத்திற்கு இடது புறமாக காரை கவனக்குறைவாக ஓட்டியதால் கார் கட்டுப்பாட்டை மீறி அங்கிருந்த பள்ளத்தில் கவிழ்ந்து விட்டதாக சொன்னார்கள் என்று சாட்சியமளித்துள்–ளார். மேற்படி அ.சா.8 ன் சாட்சியத்தை கவனமாக ஆராயும் போது அவர் எதிரி அவரது வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியதை பார்க்கவில்லை என்பதும் சத்தம் கேட்டு தான் சம்பவயிடம் சென்று சம்பவம் குறித்து கேட்டு தெரிந்து கொண்டுள்ளார் என்பது தெரியவருகிறது.

**10.5.** இவ்வழக்கின் நிகழ் நிலை புகார்தாரரான அ.சா.1 பாரதி மற்றும் கண்ணுறு சாட்சிகளான அ.சா.3 கோகுல், அ.சா.6 மாரியப்பன் மற்றும் அ.சா.8 பாலாஜி ஆகியோர் தங்களது சாட்சியத்தில் எதிரி தனது வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்றது குறித்து சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

**10.6.** இவ்வழக்கில் பிரேத விசாரணை சாட்சிகளான அ.சா.2 பூபாலன், அ.சா.4 திருச்செல்வன் மற்றும் அ.சா.5 செந்தில்நாதன் ஆகியோர் தங்களது சாட்சியத்தில் தகவல் கேள்விப்பட்டு சம்பவயிடம் சென்றதாக சாட்சியமளித்துள்ள நிலையில் மேற்படி சாட்சிகளின் சாட்சியத்தை

வைத்துக்கொண்டு எதிரி தனது வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தினார் என முடிவு செய்ய இயலாது.

**10.7.** இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டுள்ள துரைசாமி தனது சாட்சியத்தில், தேதி நினைவில் இல்லை என்றும், சுமார் 4 – 5 மாதங்களுக்கு முன்னர் ஒரு நாள் தான் பழையபாளயைம் பஞ்சாயத்து ஆபிஸ் அருகில் உள்ள ஆலமரத்திற்கு அருகில் வந்துகொண்டிருந்தபோது போலிசார் அங்கு நடந்த சாலை விபத்து வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்ததாகவும், போலிசார் அங்கு படம் வரைந்து எழுதிக்கொண்டு தன்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றதாகவும், பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.7 துரைசாமி மூலம் பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.7 ன் சாட்சியத்திலிருந்து போலீசார் சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகளை விசாரணை செய்தார்கள் என்ற பொருண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது.

**10.8.** இவ்வழக்கில் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டுள்ள திருநாவுக்கரசு தனது விசாரணையில், கடந்த 30.11.2025ம் தேதி 18.00 மணிக்கு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.பெரியசாமி சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் பொறுப்பு அலுவலில் இருந்தபோது வாதி பாரதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.264/2025, BNS 281, 106(1) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் திரு.

கோவிந்தராசன் அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும், வழக்கை தன்–னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் 01.12.2025ம் தேதி காலை 06.00 மணிக்கு சம்பவ இடமான சேந்தமங்கலம் டு அலங்காநத்தம் மெயின்ரோடு சந்திப்பில் உள்ள ஆலமரத்திற்கு அருகே சென்று சாட்சிகள் துரைசாமி, மணிபாலன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்னர் நாமக்கல் அரசு மருத்துவமணை சென்று விபத்தில் இறந்து போன மாராயி பிரேதத்தின் மீது சவகிடங்கு முன்பு வைத்து சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 08.00 மணி முதல் 10.00 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டதாகவும், இறப்பின் காரணம் அறியும் பொருட்டு மாராயி பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்து ஆய்வறிக்கை வழங்கும்படி பணி மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேதத்தை முதல்நிலை காவலர் திரு.கோவிந்தராசு மூலம் பிரேதத்தை ஒப்படைத்ததாகவும், பின்னர் சாட்சிகள் பாரதி, கோகுல், பூபாலன், திருசெல்வன், செந்தில்நாதன், துரைசாமி, மணிமாலன், சின்னுசாமி, மாரியப்பன், பாலாஜி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 04.12.2025 தேதி விபத்தின் காரணம் அறியும் பொருட்டு விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 28 BL 5133 பதிவெண் கொண்ட வாகனத்தை மோ.வா.ஆய்வாளர்க்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்ததாகவும், 18.12.2025ந் தேதி காலை 11.00 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரி கண்ணனை காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்ததாகவும், 10.01.2026ம் தேதி மோ.வா.–ஆய்வாளார் திரு.செந்தில் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோ.வா.ஆ.அறிக்கை பெற்றதாகவும், பின்னர் அன்றைய தினமே மாராயிக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் திரு.ராஜசேகர் மற்றும் பிரேத

பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் திரு.செங்கோட்டுவேல் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றதாகவும், அன்றைய தினமே முதல்நிலை காவலர் திரு. கோவிந்தராசு மற்றும் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. பெரியசாமி மற்றும் காவல் உதவி ஆய்வாளர் திரு.தமிழ்குமரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது BNS 281, 106(1) பிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.9 ன் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டது. மேற்படி அ.சா.9 சாட்சியத்தில் இருந்து புலன் விசாரணை முறையாக நடைபெற்றது என்பதை கூற முடியுமே தவிர எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக அறுதியிட்டு கூற இயலாது.

**11)** அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை மிக கவனத்துடன் பரிசீலிக்கும் போது அரசு தரப்பில் எதிரியின் அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவை நிரூபிக்கவில்லை என்பது தெரியவருகிறது. எனவே, எதிரி மீது பிரிவுகள் 281, 106(1) of BNS-ன் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்-பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12) முடிவாக,**

எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 281, 106(1) of BNS ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை BNSS பிரிவு 271(1) ன் கீழ் வி-

டுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துகள் எதுவும் கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. எனவே, வழக்கு சொத்துகள் குறித்து உத்தரவு இல்லை. எதிரி எழுதி கொடுத்த பிணைய பத்திரங்கள் இவ்வழக்கு மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு தானாக ரத்தாகி விடும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து – தட்டச்ச–ருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026–ஆம் ஆண்டு மே மாதம் 26–ஆம் நாள் செவ்வாய்கிழமை** ஆகிய இன்று திறந்த இந்–நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:31:42 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**அரசு தரப்பு சாட்சிகள்–**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.1 | பாரதி | புகார்தாரர் |
| 2 | அ.சா.2 | பூபாலன் | பிரேத விசாரணை சாட்சி |
| 3 | அ.சா.3 | கோகுல் | கண்ணுறு சாட்சி |
| 4 | அ.சா.4 | திருச்செல்வன் | பிரேத விசாரணை சாட்சி |
| 5 | அ.சா.5 | செந்தில்நாதன் | பிரேத விசாரணை சாட்சி |
| 6 | அ.சா.6 | மாரியப்பன் | கண்ணுறு சாட்சி |
| 7 | அ.சா.7 | துரைசாமி | பார்வை மகசர் சாட்சி |

| | | | |
|---|---|---|---|
| 8 | அ.சா.8 | பாலாஜி | கண்ணுறு சாட்சி |
| 9 | அ.சா.9 | திருநாவுக்கரசு | புலன் விசாரணை அதிகாரி |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்–</u>

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | புகார் மனு | அ.சா.1 |
| 2 | அ.சா.ஆ.2 | பார்வை மகஜர் | அ.சா.7 |
| 3 | அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.9 |
| 4 | அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.9 |
| 5 | அ.சா.ஆ.5 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.9 |
| 6 | அ.சா.ஆ.6 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை | அ.சா.9 |
| 7 | அ.சா.ஆ.7 | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.9 |

<u>அரசுத் தரப்பு சான்று பொருள்–</u> இல்லை

<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>

இல்லை.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:31:48 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

<u>பின்குறிப்பு–</u>

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்றக் காவலில் இல்லை.
2. வழக்கின் முடிவு இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

3. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:31:54 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

CASE SUMMARY

**CC-59/2026, Cr.No. 264 /2025**

(CNR.No. TNNM-14-000106-2026)

SENDAMANGALAM POLICE STATION

| S.No | Particulars | Purpose |
|---|---|---|
| i | The period of remand of the accused | - |
| ii | The date of filing of the Complainant/Final report in the Court | 04.02.2026 |
| iii | The date of Committal of the case to the Court of Session | NIL |
| iv | The date of questioning of the accused as the case may be | 01.04.2026 |
| v | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 355 of the BNSS | NIL |
| vi | Date of Examination in-chief and cross-examination of a witness | (see table below) |
| vii | Date of examination of the accused under section 351(1)(b) of the BNSS | 25.05.2026 |
| viii | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; | NIL |

| Witness examined as | Date of Chief Examination | Date of Cross Examination |
|---|---|---|
| PW1-Bharathi | 05.05.2026 | 05.05.2026 |
| PW2-Boopalan | 05.05.2026 | 05.05.2026 |
| PW3-Gokul | 14.05.2026 | 14.05.2026 |
| PW4-Thiruselvan | 14.05.2026 | 14.05.2026 |
| PW5-Senthilnathan | 14.05.2026 | 14.05.2026 |
| PW6-Mariyappan | 14.05.2026 | 14.05.2026 |
| PW7-Duraisamy | 21.05.2026 | 21.05.2026 |
| PW8-Balaji | 21.05.2026 | 21.05.2026 |
| PW9-Thirunavukarasu | 22.05.2026 | 22.05.2026 |

| | | |
|---|---|---|
| ix | Grant of stay by superior Courts and the results thereof | NIL |

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:32:00 +0530

Judicial Magistrate,
Sendamangalam.